நீலகிரி மாவட்டம் உதகை தலைக்குந்தா பகுதியில் பசுமை தமிழகம் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சியர் மு அருணா மற்றும் வனத்துறையினர் கலந்துகொண்டு சோலை மரங்கள நட்டனர் இதில் ஏராளமான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இந்தி தினம்

மதுரை அமெரிக்கன் கல்லூரியின் இந்தி தினத்தை முன்னிட்டு இந்தி துறை சார்பில் போட்டிகள் நடத்தப்பட்டன. முக்கிய விருந்தினராக காந்திகிராமப்புற கல்வி நிறுவன இந்தி இணைப் பேராசிரியர் டாக்டர் கந்தாரே சந்து லக்ஷ்மன் பங்கேற்றார். இந்தி துறை தலைவர் டாக்டர் சஃப்ரம்மா வரவேற்புரையும் அமெரிக்கன் கல்லூரியின் முதல்வர் டாக்டர் தவமணி கிறிஸ்டோபர் தலைமையுரையும் ஆற்றினார்கள்.

நூலகம் அமைக்க கோரிக்கை

கடலூர். செப்டம்பர். 28. கடலூரில் மஞ்சகுப்பம் காமராஜர் பூங்காவை அழகுபடுத்தி பூங்காவில் நூலகம் அமைக்க மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடலூர் மாநகராட்சி வரி /வாக்களிப்போர் நல சங்கத்தின் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக கடலூர் மாநகராட்சி வரி/ வாக்களிப்போர் நல சங்கத்தின் தலைவர் போஸ். இராமச்சந்திரன் நிருபர்களிடம் தெரிவித்தாவது.கடலூர் மஞ்சகுப்பம் காமராஜர் பூங்காவை அழகு படுத்த வேண்டும் .அங்கு நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் .மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பாரம்பரிய மீனவர்களை பழங்குடியின பட்டியலில் சேர்த்திட மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடலூர் துறைமுகத்தை ஆழப்படுத்தி மீண்டும் கப்பல் போக்குவரத்தை துவங்க மத்தியமாநில அரசுகள் ஆவண செய்ய வேண்டும். வருகின்ற பருவமழையை எதிர்கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரி, குளம் ,குட்டை, பாதாள சாக்கடை, ஆகிய இடங்களை தூர்வாரி சுத்தம் செய்ய வேண்டும் .கடலூர் திருவந்திபுரம் சாலையை அகலப்படுத்தி போக்குவரத்து நெரிசலை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கடலூர் மஞ்சக்குப்பம் பாண்டி ரோடு வழியாக செல்லும் வாகன நெரிசலை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் கடலூர் மாநகராட்சி வரி/ வாக்களிப்போர் நல சங்க நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

அக்டோபர் 4–ல் மா.ஆதனூர் நந்தனார் குரு பூஜையில்

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கிறார்



காட்டுமன்னார்கோயில், செப். 28 கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே நந்தனார் பிறந்த மா.ஆதனூர் கிரா மத்தில் அக்டோபர் 4-ஆம் தேதி நடைபெறும் நந்தனார் குருபூஜை விழாவில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்கிறார்.

தமிழ் சேவா சங்கம் சார்பில் நடைபெறும் இந்த விழாவுக்கு ஸ்ரீதர் வேம்பு தலைமை வகிக் கிறார். சங்கத்தின் ஆன்மிகம், கலாசாரம்,பண் பாடு பிரிவின் மாநிலத் தலைவர் ரா.பரமகுரு சிற்பி, நிர்வாக அறங்காவலர் சு.பா.ஞான சர வணவேல் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். விழாவில் தமி ழக ஆளுநர் ஆர்.என்.ரவி பங்கேற்று சிறப்புரையாற்றுகிறார்.

குருபூஜை விழாவில் ஆளுநரால் உபநயனம் செய்யப்பட்டு பூணூல் அணிவித்தல், விருதுகள் வழங்குதல் உள்ளிட்ட பல் வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இதற்கான ஏற்பாடுகளை ஊராட்சி மன்றத் தலைவர் மகேஸ்வரி நாகராஜன், தமிழ் சேவா. சங்கத்தின் மாநில அமைப்பாளர் அ.பாவேந்தன் ஆகியோர் செய்து வருகின்றனர். குருபூஜை விழாவையொட்டி மா.ஆதனூர். கிராமத்தில் மிக விமர்சையாக மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

திருமருகல் ஒன்றியத்தில்

5 அரசு பள்ளி கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சிமூலம் திறந்து வைத்தார்

நாகப்பட்டினம்,செப்.28– நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் பனங்குடி ஊராட்சி அமிர்தா நகரில் குழந்தை நேயபள்ளிஉட்கட்டமைப்புமேம்பாட்டுதிட்டம் 2022-23கீழ்ரூ.26லட்சம்மதிப்பீட்டில்கட்டப்பட்ட புதிய இரண்டு வகுப்பறை கட்டிடத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செவ்வாய்கிழமை காணொளி காட்சி மூலமாக கட்டிடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என்.கௌதமன்,முகமது ஷாநவாஸ் எம்.எல்.ஏ,ஒன்றியக் குழு தலைவர் ராதாகிருட்டிணன்,வட்டார வேளாண் ஆலோசனை குழு தலைவர் செல்வ செங்குட்டுவன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலமுருகன், ஜவகர், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் ஆர். இளஞ்செழியன், வினோதினி கார்த்திக், அபிநயா அருண்குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜமுனா செந்தில்குமார்,வள்ளி கலியமூர்த்தி மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். அதேபோல் திருச்செங்காட்டங்குடி, ஏனங்குடி, கொங்கராயநல்லூர், கொட் டாரக்குடி பகுதிகளிலும் தலா ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி கட்டிடங்களையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி மூலமாக திறந்து வைத்தார்.

டர்போசார்ஜ் செயல்திறனுடன் புதிய 'டி2 புரோ 5ஜி' ஸ்மார்ட்போன்: இந்தியாவில் விவோ அறிமுகம்

சென்னை,28,செப்: உலகளாவிய புதுமை மிக்க ஸ்மார்ட்போன் பிராண்டாக திகழும் விவோ நிறுவனம் தனது 'டி மாடல்' வரிசையில் புதிய விவோ டி2 புரோ 5ஜி ஸ்மார்ட்போனை இந்தியாவில் அறிமுகம் செய்துள்ளது. இது, இன்றைய தொழில்நுட்ப ஆர்வலரான இளம் தலைமுறையினருக்கும், சிறந்த செயல்திறன் அனுபவத்தைத் தேடும் அடுத்த தலைமுறை பயனர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது வரும் 29ந்தேதி முதல் பிளிப்கார்ட் மற்றும் விவோ இந்தியா இஸ்டோரில் கிடைக்கும்.

புதிய அறிமுகம் குறித்து விவோ இந்தியா நிறுவனத்தின் ஆன்லைன் வர்த்தகப் பிரிவு இயக்குனர் பங்கஜ் காந்தி கூறுகையில், எங்களின் புதிய டி2 புரோ 5ஜி அறிமுகத்துடன் இந்திய சந்தையில் எங்களின் டி2 மாடல் வரிசையின் விரிவாக்கத்தை அறிவிப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த புதிய மாடல் எங்களின் அதிநவீன அம்சங்கள் நிறைந்த கலவையின் பிரதிபலிப்பாகும். இதில் சக்திவாய்ந்த மீடியாடெக் டைமன்சிட்டி 7200 சிப்செட் 720Kக்கும் அதிகமான அன்டுடு ஸ்கோர், காண்போரை வசீகரிக்கும் வகையிலான வளைந்த 120Hz 3D வளைந்த அமோல்ட் டிஸ்ப்ளே மற்றும் தனித்துவமிக்க 64எம்பி ஓஐஎஸ் கேமராவுடன் ஆரா லைட் தொழில்நுட்பம் ஆகிய வற்றைக் கொண்டுள்ளது. எங்களின் இந்த புதிய ஸ்மார்ட்போன் மூலம் உங்கள்வாழ்க்கைமுறையை டர்போசார்ஜ் செய்து உங்கள் மொபைல் அனுபவத்தை மேம்படுத்த உங்களை அழைக்கிறோம். இந்த விலைப்பிரிவில் அனைத்து தொழில்நுட்ப வசதிகளையும் கொண்ட ஸ்மார்ட்போனாக டி2 புரோ 5ஜி உள்ளது என்று தெரிவித்தார்.

கவனமீர்க்கும் BeBetta செயலி

சென்னை, 28, செப்: விளையாட்டு சார்ந்த தளமான BeBetta, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலவசமான விளையாட்டு சார்ந்த ஒரு செயலி. கற்பனை சார்ந்த விளையாட்டுத் துறையில் தலைகீழ் மாற்றத்தை இது ஏற்படுத்த உள்ளது. பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளைப் போல் அல்லாமல், BeBetta என்பது ஒற்றுமை, தோழமை, விளையாட்டின் மீதான ஆர்வம் மூலம் புதிய விளையாட்டு சமூகத்தை வளர்த்தெடுக்க நினைக்கிறது. ஆர்வமுள்ள லட்சக்கணக்கான விளையாட்டு ஆர்வலர்களைக் கொண்ட ஒரு நாட்டில் போட்டி, குழு உணர்வு சார்ந்த சிலிர்ப்புக்கு முக்கியத்துவம் தருவதன் மூலம் விளையாட்டு அனுபவத்தை மறுவரையறை செய்யப் போகும் ஒரு கேம்-சேஞ்சராக BeBetta தனித்து நிற்கிறது.

BeBettaவின் சிஇஓ & நிறுவனர் திரு. மீட் ஷா, தளத்தின் அறிமுகம் குறித்து கூறுகையில் "BeBetta மற்றொரு விளையாட்டு தளம் அல்ல; BeBetta வெற்றி பெறுவதில் மட்டும் கவனம் செலுத்துவதில்லை; விளையாட்டு உலகில் ஒருவர் மூழ்கிப்போய், பெரும் ஆற்றலை உணர்ந்து, சிறந்த பிராண்டுகளிடமிருந்து நம்பமுடியாத வெகுமதிகளைப் பெற முடியும்" என்றார்.

செயலி அறிமுகம் குறித்து, BeBetta இணை நிறுவனர் கெஜல் ஷா கூறுகையில், "இது வெறும் ஒரு தளமல்ல; இது விளையாட்டின் மகிழ்ச்சியையும் ஒற்றுமையின் சக்தியையும் கொண்டாடும்" என்றார்.

விளையாட்டு சார்ந்த பொழுதுபோக்கில் BeBetta ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. வெறும் பார்வையாளர்களாக இருப்பதைத் தாண்டிய வாய்ப்புகளை பயனர்களுக்கு இது வழங்குகிறது; அவர்கள் நட்சத்திரங்களாக மாற வாய்ப்பு வழங்குகிறது. BeBetta செயலியில் பயனர்கள் சேரலாம், ஒரே எண்ணம் கொண்ட ஆர்வலர்களின் துடிப்பான சமூகத்துடன் விளையாட்டு தரும் மகிழ்ச்சியைக் கொண்டாடலாம். கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப் ஸ்டோரில் இது கிடைக்கிறது. மேலும் தகவலுக்கும், விளையாட்டு புரட்சியில் சேரவும், www.BeBetta.comஐப் பார்க்கவும்.

'சுல்தான் ஆஃப் டெல்லி' மிலன் லுத்ரியா இயக்கியுள்ள தொடர் அக்டோபர் 13 முதல் டிஸ்னி+ ஹாட்ஸ்டாரில் ஒளிபரப்பு

சென்னை, 28, செப்: அகர் டெல்லி கா சுல்தான் பன்னா ஹை தோ, ஜங் பினா கோலி சாலே ஜீத்னி ஹோகி! டிஸ்னி+ ஹாட்ஸ்டார் அதன் வரவிருக்கும் ஹாட்ஸ்டார் ஸ்பெஷல்ஸின் 'சுல்தான் ஆஃப் டெல்லி' டிரெய்லரை வெளியிட்டுள்ளது. சுல்தான் ஆஃப் டெல்லி: அசென்ஷன் பை அர்னாப் ரே என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள இத்தொடரை ரிலையன்ஸ் என்டர்டெயின்மெண்ட் தயாரித்துள்ளது மற்றும் பிரபல இயக்குனர் மிலன் லுத்ரியா இயக்கியுள்ளார். இத்தொடரில் இணைந்து எழுதி, இயக்கியுள்ளார் சுபர்ன் வர்மா.

அக்டோபர் 13, 2023 அன்று டிஸ்னி+ ஹாட்ஸ்டாரில் வெளியிடப்படும் சுல்தான் ஆஃப் டெல்லி ஆபத்தியில் இருக்கும் வாழ்க்கையையும், அனைத்தையும் உங்களுக்குச் சாதமாகமாற்றுவதற்கான ஒரே தேவை அதிகாரமாக இருக்கும் சூழலும் நிறைந்த ஒரு பயணத்திற்கு உங்களை அழைத்துச் செல்லும்.

இந்தத் தொடரில் தாஹிர் ராஜ் பாசின், அஞ்சும் ஷர்மா, மூத்த நடிகர் வினய் பதக் மற்றும் நிஷாந்த் தஹியா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர், மேலும் திறமையான அனுப்ரியா கோயங்கா, மௌனி ராய், ஹர்லீன் சேத்தி மற்றும் மெஹ்ரீன் பிர்சாடா ஆகிய நடிகைகளும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். டெல்லி சுல்தானுடன் 1960களுக்கு செல்ல 2023 அக்டோபர் 13 முதல் டிஸ்னி+ ஹாட்ஸ்டாரில் பிரத்தியேகமாக ஸ்ட்ரீமிங் செய்யுங்கள்!

IndoStar Home Finance Private Limited

Regd. Office: - Unit No. 305, 3rd Floor, Wing 2/E, Corporate Avenue, Andheri- Ghatkopar Link Road, Chakala, Andheri (East), Mumbai – 400093
CIN : U65990MH2016PTC271587 **Tel:** +91 22 45107701
Email: *connect@indostarhfc.com*; **Website:** www.indostarhfc.com

அறிவிப்பு

முதன்மை திசை-வங்கி அல்லாத நிதி நிறுவன வீட்டுவசதி நிதி நிறுவனம் (ரிசர்வ் வங்கி) - திசைகள், 2021 இன் பத்தி 93-ன் படி இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் கிளை அலுவலகம் எண்.97H/34, 1வது மாடி, VASR இல் அமைந்துள்ளது, பிளாசா, பாளையங்கோட்டை சாலை, புதுக்குடி, தூத்துக்குடி - 625008, தமிழ்நாடு இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட். 109/5K/10C இல் அமைந்துள்ள அருகிலுள்ள கிளை அலுவலகத்திற்கு செயல்பாடுகள் மாற்றப்படுவதால், டிசம்பர் 26, 2023 வணிக நேரத்தின் முடிவில் இருந்து மூடப்படும். எட்டயபுரம் சாலை, தூத்துக்குடி, தமிழ்நாடு 628002. ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேலே குறிப்பிட்டுள்ளபடி அருகிலுள்ள கிளை அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம் அல்லது connect@indostarhfc.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.
இந்த அறிவிப்பை நிறுவனத்தின் இணையதளத்தில் (www.indostarhfc.com) அணுகலாம்.

இந்தோஸ்டார் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
Sd/-
நிதி சதானி
நிறுவனத்தின் செயலாளர்
தேதி: 27.09.2023

திருச்சிராப்பள்ளி மாவட்டம்,குணசீலம் அருள்மிகுஸ்ரீ பிரசன்னா வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில் பிரமோற்சவம் திருவிழா வினையட்டி நடைபெற்ற திருத்தேரோட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் முசிறி சட்டமன்ற உறுப்பினர் ந.தியாகராஜன் குணசீலம் ஊராட்சி மன்ற தலைவர் எம்.குருநாதன், பி.இரத்தினவேல், பரம்பரை நிர்வாக டிரஸ்டி கே.ஆர். பிச்சுமணி அய்யங்கார் மற்றும் பலர் பங்கேற்றனர்.

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், கடலூர்
கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், வழுதலம்பட்டு, எண். 160, தெற்கு தெருவில் வசிக்கும் ஏழு மலை மனைவி சுந்தரி
.. மனுதாரர்
–எதிர்–
திரு.வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குறிஞ்சிப்பாடி
.. எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மனுதாரர் தகப்பனார் அம்மாசி த/பெ. ஆனந்தன் என்பவர் கடந்த 11.03.1990ல் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், குள்ளஞ்சாவடி, கருமாட்சிப் பாளையம், மாரியம்மன் கோயில் தெருவில் வசித்து வந்தபோது வயதுமுதிர்வு காரணமாக இறந்துவிட்டார். மேற்படி இறப்பை பதிவு செய்யப்படவில்லை. மேற்படி இறப்பை பதிவு செய்ய கோரி கடலூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்து நிலுவையில் உள்ளது. இதில் யாரேனும் ஆட்சேபனை இருந்தால் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ 15 நாட்களுக்குள் ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஆட்சேபனை ஏதும் இல்லை என கருதி ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.
சுந்தரி, க/பெ. ஏழுமலை,
வழுதலம்பட்டு.
மனுதாரர்

மேன்மைமிகு சார் ஆட்சியர் அவர்கள் கடலூர்
அ.தி.மு. /2023
மனுதாரர் :–
சாந்தா, க/பெ. பிச்சக்காரன், No.545 மாரியம்மன் கோவில் தெரு, கயப்பாக்கம், திருத்துறையூர் அஞ்சல் பண்ருட்டி. T.K. கடலூர் மாவட்டம்
எதிர்மனுதாரர் :
பண்ருட்டி வருவாய் வட்டாட்சியர் அவர்கள், கடலூர் மாவட்டம்.
மேற்படி மனுதாரரின் தந்தை மாணிக்கம். த/பெ.கந்தன்(லேட்) என்பவர் கடந்த10–01–1989 அன்று மேற்படி விலாசத்தில் இறந்தார். மேற்படி இறந்ததை எதிர் மனுதார் அலுவலகத்தில் பதிவு செய்யதவறியதால் மனுதாரரின் தந்தை மாணிகம்இறப்புசான்றிதழ் வழங்க எதிர்மனுதாரரிடம் உத்தர விடக்கோரி தாக்கல் செய்யப் பட்ட மனுவின்மீது யாருக்காவது ஆட்சேபனை இருப்பின் 15–நாட்களுக்குள் மேற்படி எதிர் மனுதாரர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு தெரிவிக்கவும் தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம்அறியவும்.
மனுதாரர்:
சாந்தா க/பெபிச்சக்காரன்.
No.545, மாரியம்மன் கோயில்தெரு,கயப்பாக்கம்.
திருத்துறையூர் அஞ்சல்,
பண்ருட்டி T.K.
கடலூர் மாவட்டம்.

பொது அறிவிப்பு

என் கட்சிக்காரரின் அறிவுறுத்தலின்படி பொது மக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், என் கட்சிக்காரர் திரு.M.கணேசன் த/பெயர் முத்துசாமி முதலியார் அவர்கள் திரு K.பழனிசாமி, த/பெயர் கருப்பண்ண கவுண்டர் அவர்களிடமிருந்து கடந்த 8 ம் தேதி மார்ச் 1995 தேதியிட்ட விற்பனை பத்திரத்தை, ஆவண எண்.1295 /1995 எண்ணாக கொளத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கிரையம் பெற்ற சொத்தானது சர்வே எண் .185/20, 3.82 ஏக்கர் இல் அடங்கிய கதவு எண் 228, டையமென்ட் தியேட்டர், திருப்பூர் தாலுகா, திருப்பூர் முனிசிபல் டவுன்.. பழைய வார்டு எண் 17.புதிய வார்டு எண் 26, கருவம்பாளையம், மங்களம் ரோடு திருப்பூர் கிராமம். மேல் குறிப்பிட்ட அசல் கிரய பத்திரத்தை 25 ம் தேதி செப்டம்பர் 2023 அன்று தி.நகரில் உள்ள வழக்கறிஞர் அலுவலகத்திற்கு செல்லும் வழியில் தொலைத்து விட்டார். எவெரேனும் மேலே குறிப்பிட்ட ஆவணத்தை பார்த்தால் அல்லது அதை பற்றி தகவல் தெரிந்தாலோ கீழ் கண்ட முகவரிக்கு தெரிவிக்குமாறு பணிவன்புடன் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

KNS Law Chambers
பழைய எண் 5/1, புதிய எண்,13,
ஜெகதீஸ்வரன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.,
தொலைபேசி எண்: 044-48616118

காணவில்லை

கார்த்திகேயன் த/பெ. ராமசாமி, 112 மெயின் ரோடு, சு.கீணனூர் கோபாலபுரம் விருத்தாசலம் வட்டம் கடலூர் மாவட்டம் எனது பெயரிலும் எனது சகோதரர் முருகன் பெயரிலும் கம்மாபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 1 புத்தகம் 659 தொகுதி 9 முதல் 11 வரை பக்கங்களில் 327/1995 பத்திர எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ள கிரைய பத்திரத்தை கடந்த 18.08.2023 அன்று கம்மாபுரம் பேருந்து நிலையம் அருகே ஜெராக்ஸ் எடுப்பதற்காக கொண்டு சென்ற போது மேற்கண்ட ஆவணம் தொலைந்து விட்டது மேற்கண்ட ஆவணத்தை தேடி பார்த்தும் கிடைக்கவில்லை இது குறித்து 21.08.2023 அன்று ஆன்லைன் புகார் கொடுத்துள்ளேன் புகார் எண் CRK23154027 ஆகும் மேற்கண்ட ஆவணம் கிடைத்தால் கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு கார்த்திகேயன்
த/பெ.ராமசாமி
112 மெயின் ரோடு
சு.கீணனூர் கோபாலபுரம், விருத்தாசலம் வட்டம்
கடலூர் மாவட்டம். செல்:9994400171.

பொது அறிவிப்பு

கடலூர் ரி–டி குள்ளஞ்சாவடி சப்ரி, புலியூர் மேற்கு பழைய சர்வேஎண் 1236/2-ல். இதற்கு புதியசர்வேஎண்.51/2-ல். 4.00 ஹெக். இதில் சம்பந்தப்பட்ட சொத்தானது 05.02.1997 அன்று ஆவண எண்.3/1997. உயில் சாசனமாக பதிவாகியுள்ளது. மேற்படி சொத்தினு டைய அசல் பத்திரமானது சேதம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு லேமினேஷன் செய்யப்பட்டு. உள்ளது. மேற்படி அசல் ஆவணம் யாரிடம் கிடையாது மற்றும் எந்த வங்கியிலும் அடமானம் செய்யவில்லை. இதில் எவருக்கேனும் ஆட்சேபனையோ இருந்தால் இவ் வறிவிப்பு வெளியான தேதியிலிருந்து 7(ஏழு) தினங்களுக்குள் தங்களது ஆட்சேபனையை தகுந்த ஆவணங்களுடன் தெரிவிக்க வேண்டும்.

தொடர்பு முகவரி
க .பரமேஸ்வரி
க/பெN. கனக சபை
எஸ் புதூர், சாத்தங்குப்பம் அஞ்சல்
கடலூர் வட்டம். செல் .9500600345.